# 14–3–2010 அன்று புதிய தலைமைச் செயலக வளாகத்தில் தொழிலாளர்களுக்கு அளித்த விருந்தளிப்பு நிகழ்ச்சியின்போது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய நன்றி உரை

இன்று நடைபெறுகின்ற நிகழ்ச்சி – கடந்த பல நாட்களாக நாம் எடுத்துக் கொண்ட முயற்சிக்குக் கிடைத்துள்ள வெற்றியைப் பாராட்டி மகிழவும் – இந்த வெற்றிக்குப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி சொல்லவும் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். பெரிய ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்தி, திருவிழா முடிவுறுகின்ற நேரத்தில் ''விடையாத்தி உற்சவம்'' என்று ஒரு உற்சவத்தைக் கொண்டாடுவார்கள். அதைப்போல இன்று நடைபெறுவது ''விடையாத்தி உற்சவம்''.

கடந்த பல நாட்களாக நம்முடைய குறிக்கோள் வெற்றி பெறுவதற்காக இங்கே உருவாக வேண்டிய – உருவாகியிருக்கின்ற தமிழகச் சட்டப் பேரவை வளாகத்திற்குச் சிலை வடிவம், சிற்ப வடிவம், கலை வடிவம் அனைத்தும் வழங்கி, இதையெழுப்புகின்ற பணியிலே ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு முதலில் நான் தமிழக அரசின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் பல பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் – பீகார், ஒரிசா போன்ற மாநிலங்களிலிருந்து தொழிலாளர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டு – மகிழ்ச்சிப் பெருவெள்ளத்திலே எங்களையும் ஆழ்த்தி – அவர்களும் ஆழ்ந்திருக்கிறார்கள்.

தொழிலாளர்களும், அரசு அலுவலாளர்களும், உங்களோடு சேர்ந்து அமைதியை உருவாக்கப் பாடுபட்ட காவல் துறை நண்பர்களும், இன்றைக்கு மகிழ்ந்திருக்கின்ற நேரத்தில், மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கு அவரவர்களுக்குத் தெரிந்த, உகந்த, அவரவர்கள் விரும்புகின்ற அந்தந்த மாநிலத்துப் பாடல்களை இங்கே பாடியிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் இந்து ராம் அவர்கள்கூட என்னிடத்திலே, ''இந்தி பாடல்களைப் பாடுகிறார்களே'' என்று கேட்டார். நான் நினைத்துக் கொண்டேன் – ''பாட்டுக்கு இந்தி பரவாயில்லை, தமிழ் நாட்டுக்கு அது தேவையில்லை'' என்று நான் நினைத்துக் கொண்டேன். (கைதட்டல்)

எந்தவொரு மொழியும் இந்தியாவைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களோடு உறவு கொள்கின்ற, தொடர்பு கொள்கின்ற நிலையிலே இருந்தால் அதில் தவறில்லை. ஒரு மொழிக்காரர்கள் இன்னொரு மொழிக்காரர்களை ஆதிக்கம் செலுத்துகின்ற அந்த நிலையைத்தான் நாங்கள் விரும்புவதில்லை, ஆனால் அவரவர்களுடைய விருப்பத்திற்கேற்ப இங்கே தொழில் புரிய வந்திருக்கின்ற நீங்கள் – ஆயிரக்கணக்கான தொழிலாளர்களாகிய நீங்கள் விரும்பிக் கேட்ட இந்திப் பாடல்களை இங்கே பாடியிருக்கிறார்கள். அதைப் போலவே தமிழ்ப் பாடல்களை அவர்கள் இங்கே பாடும்போது, அவர்கள் யாரும் அதை வெறுத்திடவில்லை, வரவேற்றிருக்கிறார்கள். இப்படி ஒருவருக்கொருவர் உறவு ஏற்பட வேண்டுமேயல்லாமல், ஒருவரையொருவர் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற நிலைமை கூடாது என்பது தான் எங்கள் கொள்கை.

மிக உயர்ந்ததும் – உயரமானதுமான இந்த உன்னதக் கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கு இதை ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் மாத்திரமல்ல – அதற்குக் காரணமாக இருக்கின்ற அரசு மாத்திரமல்ல – அரசின் அலுவலாளர்களும், ஒப்பந்தக்காரர்களும், இதற்கு வடிவமைத்தவர்களும், வடிவமைத்தவர்கள் கூறியவாறு வண்ணமாக இந்தக் கட்டிடம் அமைவதற்குப் பாடுபட்டவர்களும், குறிப்பாக எந்த ஆபத்தைப் பற்றியும் கவலைப்படாமல் – இந்தக் கட்டிடத்திலே கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாக பணியாற்றியிருக்கின்ற உங்களுக்கெல்லாம் என்னுடைய தலைதாழ்ந்த வணக்கத்தையும், அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். (கைதட்டல்)

இந்தக் கட்டிடம் எழிலோடு முழுமை பெற வேண்டுமென்பதற்காக நான் ஒவ்வொரு நாளும் இந்த இடத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டு, அப்படி வருகிற நேரத்தில் எல்லாம் இங்குள்ள தொழிலாளர்களை, இங்கேயிருக்கின்ற மேலாளர்களை, செயலாளர்களை நான் தூண்டி விட்டு இப்படியிப்படி திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று அவர்களுக்கெல்லாம் தொந்தரவு கொடுத்திருக்கிறேன் என்பதை நான் புரிந்து கொள்ளாமல் இல்லை. அந்தத் தொந்தரவுக்குள்ளேயும், ‘‘தோழி சுகம் கண்டேன்’’ என்று பாரதிதாசன் பாடியதைப்போல நான் சுகம் கண்டேன் – நீங்களும் அந்தச் சுகத்தை அனுபவித்தீர்கள். இரண்டு பேரும் கண்ட சுகத்தின் அடையாளமாகத்தான் இந்த உயர்ந்த கோபுரம் இமயத்தின் வரையிலே உள்ளவர்கள் பாராட்டும் வகையில் எழும்பியிருக்கின்றது. இந்தச் சிறப்பை ஜெகத்திற்கும் சொல்லிக் கொண்டிருக்கிறது. இதிலே பாடுபட்டவர்களுக்கெல்லாம் நன்றி சொல்லுகின்ற கட்டம் இது. இந்தக் கட்டத்தில் பொதுப்பணித் துறை செயலாளராக இருந்து – ஒத்துழைத்து – இந்த அருமையானக் கட்டிடப் பணி நிறைவேறுவதற்கு துணை நின்று இன்னும் எஞ்சியப் பணிகளையும் விரைந்து முடிக்கத் தயாராக இருக்கின்ற ராமசுந்தரம், ஐ.ஏ.எஸ்., பொதுப்பணித் துறை செயலாளரை நான் பாராட்டுகிறேன்.

பொதுப்பணித் துறையின் ஓய்வு பெற்றச் செயலாளர் ஆதிசேஷய்யா, ஐ.ஏ.எஸ்., அவர்களையும் பாராட்டுகிறேன். இப்படி அடிக்கடி வந்து தொல்லை கொடுக்கிறானே என்று எண்ணாமல், நான் சொன்னவைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு தலையசைத்து நிறைவேற்றியுள்ள பொதுப்பணித் துறை கட்டிட தலைமைப் பொறியாளர் கருணாகரன், பி.ஈ., அவர்களையும் பாராட்டு கிறேன்.

எந்த ஒப்பந்தங்களைத் தேர்வு செய்வதென்று அமைச்சரவையினர் பார்வையிட்டு, எதையேற்றுக் கொள்ளலாம் என்று தேர்வு செய்த நேரத்தில் ஜெர்மனியிலிருந்து வந்த அந்த ஒப்பந்ததையேற்றுக் கொள்வதென்று முடிவு செய்தோம். கட்டிடக் கலை வல்லுநர் கிறிஸ்டியன் அவருடைய ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒப்பந்தக்காரர் முகமது முஸ்தபா அவர்கள் இந்தப் பணியினை முடித்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக அத்தனை பேருடைய பணியினையும் இணைத்து எனக்கு உதவிகரமாகவும் தமிழகத்தின் எதிர் காலச் சரித்திரத்திலே இடம் பெறக் கூடியதுமான இந்த ஒப்பற்ற மாளிகை இங்கே எழுவதற்கு காரணகர்த்தாக்களிலே ஒருவராக இருந்த நம்முடைய தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

குறிப்பாகவும் சிறப்பாகவும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி எத்தனையோ பயமுறுத்தல்கள் – மிரட்டல்கள் எல்லாம் இருந்துங்கூட, அவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, அஞ்சாமல் நின்று காவல் துறை ஆணையாளர் திரு. ராஜேந்திரன், ஐ.பி.எஸ்., அவர்களும் மற்றும் காவல் துறை தலைமை அதிகாரிகளும், துணை அதிகாரிகளும் காவல் துறையிலே உள்ள ஆயிரக்கணக்கான நண்பர்களும், இது தங்களுடைய விழா என்ற அந்தக் கருத்தோடு பாடுபட்டு அமைதியைக் காத்ததற்காக நான் நன்றி கூறிக் கொள்கிறேன்.

எல்லாவற்றையும் விட பெரும் சிறப்பாக கடுகை மலையாக்கி விடாமல் – சிறிய விஷயங்களையும் பெரிதுபடுத்தி மக்களைப் பீதிக்கு ஆளாக்காமல் – எங்களுடைய பணிகள் ஒழுங்குற அச்சமின்றி நடைபெற எங்களோடு ஒத்துழைத்திருக்கின்ற பத்திரிகை துறை நண்பர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன், நன்றி கூறிக் கொள்கிறேன்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.